DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 351/2024

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | வெங்கடேசன் |
| Father / Husband Name | ஏழுமலை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 09.09.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஒரத்தியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 16.05.2024ம் தேதி மாலை 4.30 மணிக்கு நான் கழனியில் இருந்தபோது ஆஜர் எதிரி சாந்தியை அசிங்கமாக பேசி காலால் எட்டி உதைத்து கட்டையால் அடித்து கொலை மிரட்டல் விடுத்ததை நான் நேரடியாக பார்த்தேன் என்றால் இல்லை. மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்த்துவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 351/2024
Miscellaneous :
Sessions : PW 5
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | முத்துலட்சுமி |
| Father / Husband Name | ராஜகோபால் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 09.09.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஒரத்தியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சாட்சி வாசுதேவன் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 17.05.2024 ம் தேதி பகல் 12.30 மணிக்கு நானும் வாசுதேவனும் ஏழுமலையின் கழனியில் இருந்தபோது ஆஜர் எதிரி சாந்தியை அசிங்கமாக பேசி காலால் எட்டி உதைத்து கட்டையால் அடித்து கொலை மிரட்டல் விடுத்தது சம்மந்தமாக போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் இல்லை. அன்றைய தினம் சம்பவ இடத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் சுமார் 3 அடி நீளமுள்ள சவுக்கு கட்டை ஒன்றை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள் என்றால் இல்லை. மேற்படி பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 351/2024

Miscellaneous :

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ஜெயப்பிரியா |
| Father / Husband Name | சுகுமார் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 09.09.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் மருத்துவமனையில் பணிபுரிந்த மருத்துவர் வினோத்குமார் என்பவரின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். அவர் பணிமாறுதல் ஆகி சென்றுவிட்டதால் நான் தற்போது வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 15.05.2024 ம் தேதி மருத்துவர் வினோத்குமார் பணியில் இருந்தபோது அன்றைய தினம் இரவு 8.30 மணிக்கு சாந்தி என்பவர் தன்னை தெரிந்த ஒரு நபர் இரவு 7.30 மணிக்கு தனது வீட்டின் அருகே கட்டையால் தாக்கியதாக சிகிச்சைக்கு வந்த நபரை பரிசோதித்தபோது அவருக்கு முதுகில் காயம் இருந்தது. அவரை உள் நோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்ப காயம் என்று சான்று வழங்கியுள்ளார். **(சாந்திக்கு வழங்கிய விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**குறுக்கு விசாரணை**

2. மேடான பகுதியில் இருந்து கீழே விழுந்தாலும் இதுபோன்ற காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.